செ.வெ.எண்: 35 நாள்:19.01.2018

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவுப்பொருட்களின் தரம் குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர் தொடர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பொது சுகாதாரத்துறையின் சார்பில் தமிழக அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்து சுகாதார திட்டங்கள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் (18.01.2018) அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட நலச்சங்கம், குடும்ப நல அறுவை சிகிச்சை தர நிர்ணயம், அரசு அலுவலர்களுக்கான மருத்துவக்காப்பீட்டுத்திட்டம், டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித்திட்டம், நோயாளர் நலச்சங்கம், தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டுச்சங்கம், இரத்தவங்கி செயல்பாடு, காசநோய் திட்டம், தொழுநோய் திட்டம், உணவு பாதுகாப்புத்துறை, சித்த மருத்துவம், மாவட்ட பார்வை இழப்பு தடுப்புச்சங்கம் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரத்திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணி தாய்மார்கள் சிகிச்சை விபரம், புறநோயாளிகள் மற்றும் உள்நோயாளிகள் எண்ணிக்கை, குழந்தை பிறப்பு விகிதம், குழந்தைகளுக்கு தடுப்பூசி போடப்பட்ட விபரம், அறுவைசிகிச்சை விபரம், குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் பொதுமக்களிடம் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு, இரத்தவங்கிகளில் உள்ள இரத்த இருப்பு, 108 வாகனங்களின் செயல்பாடு, மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டை வழங்கிய விபரம், காசநோயாளிகள் மற்றும் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படும் சிகிச்சைகள், எச்.ஐ.வி-ஆல் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை, தொடர் கூட்டு மருந்து சிகிச்சைகள் மற்றும் நம்பிக்கை மையத்தில் வழங்கப்படும் ஆலோசனைகள், கண் பரிசோதனை முகாம், கண் கண்ணாடிகள் வழங்கப்பட்ட விவரம் மற்றும் கண் பரிசோதனை செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியபோது தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை மேல்சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்கு அனுப்பும் பொழுது நோயாளிகளிடம் நோயின் தன்மை குறித்து விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும். கிராமப்பகுதிகளில் பொதுமக்களிடையே அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வரும் தரமான மருத்துவ சேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித்திட்ட பணியாளர்கள் அங்கன்வாடி மையங்களுக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சத்தான சரிவிகித உணவு குறித்து எடுத்துரைக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உணவகங்கள் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவுப்பொருட்களின் தரம் குறித்து உணவு பாதுகாப்பு அலுவலர் தொடர் சோதனைகள் மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நுகர்வோர்களுக்கு தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். மேலும் அரசு மருத்துவர்கள் தங்களது பணிகளை சிறப்பாக மேற்கொள்வதுடன் மருத்துமனைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர்(ஊரக நலப்பணிகள்) (பொ) மரு.பெரியசாமி, பொது சுகாதார துணை இயக்குநர்கள் மரு.பரணிதரன் (புதுக்கோட்டை), மரு.கலைவாணி (அறந்தாங்கி), புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாரதா, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**